| | | |
|---|---|---|
| சாட்சி : DW1<br>சரவணன், த/பெ செல்லையா | அ.வ.எண்.241/2022 | 18.03.2026 |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

6) தாவா சொத்தின் சர்வே எண்.129/13 என்றால் சரிதான். அதன் மொத்த விஸ்தீரணம் 0.24.5 ஏர்ஸ் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் நாளது தேதிவரை உட்பிரிவு செய்யப்படாமல் இருந்து வருகிறது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு மேற்புறம் எனது சொத்து உள்ளது என்றாலும் அதன் சர்வே எண்.129/13 என்றாலும் சரிதான். மேற்படி சொத்தில் தான் நான் தற்போது இருந்து வருகிறேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் செல்லையாவின் தாயார் பெயர் மாரியாயி என்றால் சரிதான்.

7) மாரியாயி, செல்லையாவிற்கு 07.06.1994 ம் தேதி செட்டில்மெண்ட் ஆவண எண்.2057/1994 எழுதி வைத்தார் என்றால் சரிதான். மேற்படி சொத்தின் மொத்த விஸ்தீரணம் 60 செண்ட் என்றால் சரிதான். அ.வ.எண்.576/1982 என்ற வழக்கு துறையூர் நீதிமன்றத்தில் நடந்தது என்றாலும் இந்த வழக்கின் வாதிக்கு அதில் சாதகமாக தீர்ப்பாகியிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் எனது தகப்பனார் ஒரு தரப்பினராக இருந்ததால் மேற்படி தீர்ப்பு என்னையும் மற்ற பிரதிவாதிகளையும் கட்டுபடுத்தும் என்றால் சரியல்ல.

8) தெய்வானையம்மாள் சுவாதீனம் எடுத்த பின்னர் தாவா சொத்தை அளக்க வந்தார்கள் என்றால் சரிதான். தெய்வானையம்மாள் வேலி போட இருந்ததை நான் தடுத்துவிட்டேன் என்றால் சரிதான். தாவா சொத்து தெய்வானையம்மாள் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் உள்ளது என்றாலும், தெய்வானையம்மாள் சுவாதீனம் எடுத்துவிட்டதால் அவரை தடுப்பதற்கு எங்களுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

9) தாவா சொத்தில் தெய்வானையம்மாளுக்கு தான் முழு உரிமையும் உள்ளது என்றாலும், எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தெய்வானையம்மாள் தாவா சொத்தை அளந்த போது நாங்கள் தடுத்து தாவா சொத்தை அபகரிக்கும் நோக்கத்தோடு செயல்பட்டது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து வாதிகள் கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**Signed,**
**சரவணன்**

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

PRAGATHEESHWARAN SUBRAMANIAN
Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**இலால்குடி.**